கவிதைத் தொகுதி

# காவிரி முதல் மாவெலி வரை

பெயாவெல். ஏ. செல்வராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
16-8-2000
LIBRARY

Presented
to the Library of the
UNIVERSITY OF PERADENIYA
by Mr. A. SELVARAJA
on 8TH OCTOBER 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காவிரி முதல் மாவெலி வரை"

பெயாவெல். ஏ. செல்வராஜா

கவிதை தொகுதி

510482

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Title of the Book | : | **'Kaviri Muthal Mahavali Varai'** |
| Author | : | **Bairwel A. Selvarajah** |
| Language | : | **Tamil** |
| Edition | : | **First** |
| Date of Publication | : | **October 1995** |
| Copy right Holder | : | **Publisher** |
| Size of the Book | : | **1/8 Crown (18.5 CM X 12.5CM)** |
| Printing Pont | : | **10 Point** |
| Number of Pages | : | **28** |
| Number of Copies | : | **1000** |
| Publisher | : | **Bairwel A. Selvarajah** |
| Printer | : | **Universal Printers,<br>90, Side Street,<br>Hatton.** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

'எங்களூர்' நிலைமைகளே ஆதார சுருதியாக தொனிக்கும் இவ்வாக்கங்களில் முழு மலையகத்தையும் அடையாளங்காட்டும் தியாகிகள், திருடர்கள் ஆசிரியர்கள் இலட்சியங்கள் நம்பிக்கைகள் அவலங்கள் என பரவலான 'மாதிரி' கள் வெளிச்சத்துக்கு வருகின்றன.

'சீசனுக்கு சீசன்' ஜனரஞ்சக கதாநாயகர்களாக முகங்காட்டும் வில்லர்களை மலையகத்தின் பிற படைப்பாளிகளைப் போன்றே,
ஆதங்கத்துடன் - அடிப்படையில் ஆத்திரத்துடன் அம்பலமாக்குகிறார் செல்வராஜா.

இத்தொகுப்பில்
நிலாவும் புழுதியும், கண்ணீரும் வண்ணங்களும், முட்டையும் ரயிலும், லைசென்சும் ஜனநாயகமும் புதுப்பொருள் தந்து சிந்தனையைக் கிளர்கின்றன. இவை காலத்துக்கேற்ற படைப்புகள்.

கவிஞருக்கு கைகொடுப்போம்.

**எம். நாகலிங்கம்**
அதிபர்,
ஹோலிறோசரி வித்தியாலயம்,
பொகவந்தலாவ.

95-10-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காவிரி முதல்
மாவெலி வரை"

"கவிதைத் தொகுதி" புத்தகத்தை பெற்று எமக்கு ஆதரவும் உற்சாகமும் வழங்கி கௌரவித்த உங்களுக்கு எமது உள்ளங் கனிந்த நன்றிகள்.

இங்ஙனம்,

அ. ஆ இராஜேந்திரம்
பாலா. சங்குபிள்ளை
அட்டன்-டிக்கோயா தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக்கை

தொழிற்சாலை வேலைமுடிந்த
பின்னெல்லாம் எனை தோளிற்சுமந்த
என்தந்தை "அங்கமுத்துவுக்கும்"
மலைவேலை முடிந்த பின்னெல்லாம்
எனை மடியில் கிடத்திய
என் அன்னை "ஐயம்மாவுக்கும்"
என் உயர்வுக்காகவே உழைத்த
சிறியதந்தை அருணாசலத்துக்கும்
சிறியதாய் சித்திராயிக்கும்
இச் சிறுநூல் என்

காணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இந்நூலில் மலையக மக்களின் சில வாழ்க்கைச் சுவடு களை பதிய முயன்றுள்ளேன். இந்நூலினை எழுத உதவி யது என் மக்களின் வாழ்வு. நான் ஒரு தோட்ட தொழி லாளியாய் என் வாழ்வினை ஆரம்பித்தவன். இக் கவிதை களில் சொல்லப்பட்ட எல்லா துன்பங்களையும் ஏமாற்றங் கள், தோல்விகளையும் தொட்டவன்.

எனக்கு இலக்கியத்தின் அடிச்சுவட்டினை போதித் தவர் மல்லிகை சீ. குமார். எனது ஆக்கங்களை ஆங்காங்கு பிரசுரித்து உதவிய தினகரன் சித்திக்காரியப்பர், சிந்தா மணி தமிழ்மாறன், வீரகேசரி தேவராஜ், குன்றின் குரல் ஜேஸ்கொடி, தாயகம் தம்பையா, விடிவு நிந்ததாசன், தேசிய முரசொலி வேலாயுதன்,

மேலும் இலக்கிய துறையில் சோர்வடைந்த போதெல்லாம் என்னை உற்சாகப்படுத்திய ஆத்மார்த்த கிருஸ்ணா, ஜெயா, சந்திரலேக்கா, சரஸ்வதி, வசந்தி, இராமர், என் சகோதரர்கள், அண்ணிகள்,

எனக்கு வரட்சி வந்தபோதிலும் வாரிவழங்கிய நண்பர் சோக்கு சுப்பிரமணியம், அம்பாள்ஸ் கோபால கிருஸ்ணன், நஷனல் கந்தசாமி J. P., புனிதா சுதாகரன்,

தனியே தாரமாக அமையாது இளைய தாயான வசந்தா,

அச்சிடவும், அணிந்துரையும், மேலும் பெறுமதி மிக்க ஆலோசனைகளையும் வழங்கிய என் மதிப்புமிக்க ஆசான்கள் திருவாளர்கள் மெய்யநாதன், நாகலிங்கம், அறிமுக உரை எழுதிய தமிழ்மணி குறிஞ்சு தென்னவன்,

இவர்களே என்னை புத்தகமாக்கியவர்கள்

**ஏ. செல்வராஜா,**
சென் மேரிஸ் த. ம. வி.,
பொகவந்தலாவ.

திகதி: *09-08-1995*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களூர் மஹாமித்தியம்

தோட்ட கமிட்டி தலைவர் ஒருவர் தனது தொழிற்சங்கத் தலைவரைக் காணச் செல்கின்றார்.

குரல்: வாழ்க தொழிலாளர்
வாழ்க தொழிலாளர்.

தொழிற்சங்க தலைவர் தனது பியோனிடம்.

பையா
போடா
வெளியே!
பாரடா
யாரடா?

பியோன் - தொழிற்சங்க தலைவரிடம்.

ஐயா!
தங்கமலை
தலைவன்
தங்கவேலு
தட்டி கேட்கின்றான்
தலைமையை
உரிமை கேட்கின்றான்
உரத்து-

தொழிற்சங்க தலைவர் - பியோனிடம்

போடா
அவரை
வரச்சொல்.

பியோன் - தோட்டகமிட்டி தலைவரிடம்

ஐயா!
அழைக்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக
வரட்டாம்-

தொழிற்சங்க தலைவர் - தோட்ட கமிட்டி தலைவரிடம்.

நடந்தா
வந்தாய்
தங்கா-
சொல்லி
-யிருந்தால்
சொகுசு
காரை
அனுப்பியிருப்பேனே!

தோட்டகமிட்டி தலைவர் - தொழிற்சங்க தலைவரிடம்.

உருண்டும்
வருவேன்
உரிமை கேட்க-

பசியால்
துடிக்கும்
என் மக்களின்
பசியை போக்க-

கம்பனியோடு
உங்கள்
பேச்சு
என்னாச்சி-

எங்கள்
உரிமைகள்
எல்லாம்
காத்தோடு
போயாச்சி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு
உரிமை
என்னாச்சி-

சின்ன
''அட்''
அடிச்ச
சின்னசாமியை
தோட்டத்தவுட்டு
வெளியே
போட்டாச்சி-

ஆயிரம்
ஆசிரியர்
என்னாச்சி-
எங்கள்
பிள்ளைகளின்
படிப்பு
போச்சி-

''ஐடின்டிகாட்''
பிரச்சினை
என்னாச்சி
எங்கள்
பிள்ளைகள்
பொலிஸில்
கம்பி
என்னலாச்சி-

கட்சி தலைவர் - தோட்ட கமிட்டி தலைவரிடம்·
பொறு
''தங்கா''-
தொடர்ந்து
தேனீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்து
விட்டு
பேசு-

தோட்டகமிட்டி தலைவர் - கட்சி தலைவரிடம்.

பில்லு
வெட்டுபவனும்
பீ. ஓ. பீ.
குடிக்க
வேண்டும் -
இதுவே
எமது
போராட்டம்-

கட்சி தலைவர் - பையனிடம்.

வேண்டாம்
தேனீர்...

(புரிந்து கொண்ட பையன், மது போத்தலை கொண்டு வருகின்றான்)

தோட்டகமிட்டி தலைவர்.

ஹி ஹி ஹி......

தொழிற்சங்க தலைவர் - தோட்டகமிட்டி தலைவரிடம்.

நீண்ட
நாளாய்
விரும்பி
கேட்டாயே
''கங்காணி
வேலை''
இந்தா
புடி
கடுதாசியை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
மகள்
அதுதான்
மண்டோதரி
''ஆயா''
வேலை
வாங்கி
தாறேன்-
பையா
அடி
அப்ளிகேஷனை-
உன்
சின்ன
மகன்
சத்திவேலுவை
எங்க
ஆபிசுக்கு
அனுப்பிவை
போட்டுதாறேன்
கிளார்க் வேலை.

(தோட்டகமிட்டி தலைவன் தங்கவேலு, தலைவரின் காலில் விழுந்தபடியே)

ஐயா
நீங்கள்
வாழ்க-

UNIVERSITY OF PERADENIYA
16-8-2000
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்க
எங்கள்
உரிமைகள் -

குரல்: வாழ்க தலைவர்
வாழ்க தலைவர்.

— திரை —

யாவும் கற்பனை?

*

புயலென எதிர்பார்த்தோம்
ஆனால் வெறும்
புழுதி -
எங்களூர் தலைமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களூர் வரலாறு

சங்கத் தமிழனின் சாதிவெறி
சிங்கத் தமிழனின் இதயம் - சிதறியது-
வங்கக் கடலின் உப்பினை விட
வந்த தமிழனின் கண்ணீர் உப்பதிகம்.

காவிரிப்பூம்பட்டினம் - கம்பன் இலக்கியம்-
கற்பனைகள் வெறும்
கற்பனைகள்.

சோழர் இராச்சியம் இமயமுடியில்
இலச்சினை பொறித்தது-
கீழ்த் திசைநாடுகள்
இதன் கீழ்வந்தன-
அவையெல்லாம்
சொப்பனங்கள் வெறும்
சொப்பனங்கள்.

மலேசியாவின் காடுகள்-
பிஜியின் காடுகள்-
ஸ்ரீலங்காவின் காடுகள்-
இறப்பர் கரும்பு தேயிலை தோட்டங்களாகின.

கடலில் அலைகள் மட்டுமா ஆடின! இவர்களின்
கனவுகளும் தான்-
கடலில் அலைகள் எழும் விழும்,
இவர்கள் ஆசைகளும்தான்-

மன்னார் முதல்
மலையகம் வரை - இவர்கள்
காடுகளை கடந்தபோது .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள்!
பசியால் துடித்தனர்.
தங்களின் உடல்களால்
மிருகங்களின் பசியைத் தணித்தனர்-

அண்ணனின்
எழும்புக் கூடு
தம்பிக்கு வழிகாட்டின-

தோட்டங்களில்
வெள்ளையன்
இராச்சியம்-
வீடுகளில் கூட
பெரிய கங்காணிகளின்
இராச்சியம்-

எதிர்த்தவர்
அழிவர்,
மீந்தவர்
மெலிவர்-

காடுகள்
வீழ்ந்தன
களனிகள்
ஆகின-

தேயிலை
இறப்பர்
தென்னைகள்
பூத்தன.

காலச் சுழற்சியில்
இவர்கள்
கருகிப்
போகினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள்
யாவும்
காற்றோடு
கரைந்தன-
இவர்கள்
சீவியம்
மட்டுமல்ல-
''சிட்டிசன்''
கூட
சிறைபட்டு
போயின-

ஒப்பந்தங்கள்
உருவாகின-
இவர்களின்
உயர்வுக்காக
அல்ல-

கணவனும் - மனைவியும்
தாயும் - பிள்ளைகளும்
தனித்தனியாகினர்-
பிரித்தது
சட்டம்-

குமுறும்
நெஞ்சத்தில்
கொதித்தெழும்
உணர்வுகள்-
சோக இசையை
தொடர்ந்தும்
மீட்டின.

''அலைமோதும் கடலே உனக்கு
சேதி தெரியுமா நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைக்கு போகின்றோம் - ஏன்
தெரியுமா!
நிச்சயமாய் நாம் மடிவோம் சிலநாளில்
அதற்கு-
நிலம் தேடி போகின்றோம்
போய்வருகின்றோம்.
புனர்வாழ்வு என்பதெல்லாம்
புனல்மேல் எழுத்தாமே!
போனவர்கள் படும் துயரம் - எம்
நெஞ்சத்து நெருப்பாமே!
போனவர்கள்
போக-
இங்கு வாழ்பவர்கள்?

ஏய்
வரலாறே
எங்களை
வதைத்திடல்
கூடும்.
அழித்திடல்
கூடுமோ!

●

---

**எம் பீக்கள், அமைச்சர்கள்**
**காட்டவில்லை பச்சைக்கொடி**
**நகரவில்லை**
**லயங்கள்.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களூர் ஸ்கூல்

இடிந்து விழும்
சுவர்கள்!
வெள்ளைக்
கரும்பலகைகள்!

காலுடைந்த
கதிரைகள்!

ஆயிரம்
பிள்ளைகள்
ஆனால் ஓர்
ஆசிரியர்!

இது தான்
எங்கள்
பள்ளி!

இளமையிலேயே
எங்கள்
அறிவுக் கண்களை
குத்திக் கிழிக்கும்
ஆரம்பப் பள்ளி!

---

**சீதன சந்தையில்**
**சில்லறை விலையில்**
**எங்களூர் பட்டதாரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களூர் திருடர்கள்

நிலா
நாட்களில்
வீட்டிலிருந்தே
விண்வெளி ஆய்வு
நடத்திடலாம்.

மழைநாட்களில்-
வீட்டிலிருந்தே
நீச்சல்
கற்களாம்-

எங்கள் வீட்டு ஓட்டைகளை
அடைக்க வந்த
ஓடுகளை
கள்ளச்சந்தையில்
நீங்களும்
வாங்கிடலாம்.

**லயத்து பிள்ளைகளுக்கு**
**எட்டாத ரொட்டி**
**நிலா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களூர் இலட்சியம்

வெற்றியே நீ
வேகும் பாலைநிலத்தில்
வெகுதூரத்தில்
இருந்தாலும்,
உனை நோக்கி .....
உனை நோக்கி......
நாம்
நடப்போம்!
சுட்டெரிக்கும்
வெயிலில்
எம் பாதங்கள்
வெடித்து
சிதறினாலும்
உனை நோக்கி......
உனை நோக்கி......
வேதனைகளில்
எங்கள்
இதயம்
வெடித்தாலும் .....
எங்கள் ஆத்மா வேனும்
உங்களை
அடைந்தே தீரும். (தினகரன்-1979)

---

**தேர்தலின் பின்**
**காணாமல் போவது**
**வாக்கு சீட்டுக்கள் மட்டுமல்ல**
**பிரதிநிதிகளும் தான்.**
**ஜனநாயகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களூர் தியாகிகள்

வரலாற்றோடு பலர்
சமரசம் செய்து
கொண்டார்கள் -
சிலர்
வரலாற்றினை
மாற்றினார்கள் -

இன்னலுறும்
மக்களுக்காக
போராட
இனம் தடையில்லை
அப்படித்தானே!
ஆபிரகாம் சிங்கோ.

இடதுசாரி
எழுச்சியில்
எங்கள்
பங்குமுண்டு-
என்ன!
கீனாக்கலை
அழகர்சாமி-

இறந்தபின்
வேண்டுமெனின்
ஆறடி மண்ணில்
''அட்ஜஸ்ட்''
செய்து கொள்ளலாம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதற்கு
நிலம்
தேவை

அப்படித்தானே!
சிவனு இலட்சுமனா-

உங்கள்
வாழ்வு
மகத்தானது
அதைவிட
மகத்தானது
உங்கள்
சாவு.

---

**தோண்டும் இடமெல்லாம்**
**மண்டை ஓடுகள்**
**இரத்தின தூபீகம்.**

---

# எங்களூர் ரயில்

பெற்ற தாயை பிரித்துவிட்டு
பிள்ளையை கடத்தவரும்
எங்களூர் ரயில்-

தினமும் அழுகை கண்ணீரில்
நனைந்து வரும்-
எங்களூர் ரயில்-

யாரோ இருவர்
செய்துக் கொண்ட
ஒப்பந்தத்துக்காக-

ஓர் இனத்தின்
ஆத்மாவினையே
அழிக்க வரும்
எங்களூர் ரயில்.

★

**பசுக்களின் பால் சுவையானது**
**எமது அடுத்த இலக்கு**
**அதன் இரைப்பை.**
**பிரதிவுபகாரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களூர் இந்திய பாஸ்போட்காரன்

என் தாயை விட்டு
என்னை பிரிக்கும் முன்
என் தலையை
கொய்துவிடு!

என் மண்ணை விட்டு
என்னை பிரிக்கும் முன் - அம்
மண்ணில் என்னை
புதைத்து விடு!

ஊரை விட்டு என்னை
விரட்டும் முன் என்னை
உயிரோடு
எரித்து விடு!

தேசத்தை விட்டு
என்னை விரட்டும் முன்
என்னை தேடமுடியாத
இடத்தில்
வீசி விடு!

●

**ஒட்டிப் போனால்
உடைந்து போகும்
முட்டைகள்
எங்களூர் உறவுகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களூர் தேயிலை

தேயிலை தூளின்
நறுமனம்-
எம் வியர்வை.

தேயிலை தூளின்
சிகப்பு சாயம்
எங்கள் உதிரம்.

தேயிலை தூளின்
கறுப்பு நிறம்
எங்களது வாழ்வு.

- தாயகம்.

**கள்ளச் சாராயத்தை**
**கண்டு அழியுங்கள்**
**அரச மது விற்றிடல் வேண்டும்.**
**சட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களூர் பணிப்பெண்

ஓலையூர் குடிசைதனை ஓட்டூர் ஆக்குதற்கு
பாலையூர் போகும் பெண்ணே உன்
பயவூரை விட்டுத்தள்ளு-

நீ காசூர் போனதனால் உன்
கற்பூர் போனதென வாயூர் பேசிடவே
உன் வாலிபவூர் மக்களுக்கு-
வக்கூர் யாது சொல்லு-

சீதணவூர் இல்லையெனின்
செல்விவூர் தான் வெறுக்கும்-
தங்கவூர் இல்லையெனின்
தாரவூர் தான் கசக்கும்-

எந்த வூர் இருந்தாலும்
இதய வூர் செழிக்காது-
சொந்தவூர் சுவைக்காது-
சுவையூர் தோணாது.

UNIVERSITY OF PERADENIYA
16-8-2000
LIBRARY

*

நாய்களுக்குக் கூட
லைசன்ஸ் தேவையில்லை-
எங்களுக்கு இது
கட்டாயம் தேவை.
**பிரஜாவுரிமை பத்திரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களூர் மாணவர்கள்

ஒரு தாளின்
இரு பக்கங்களாய்
நாமிருந்தோம்-

பாதி தேனீரை
பகிர்ந்து குடித்ததும்-
பாதையில் அமர்ந்து
மறியல் செய்ததும்
பகற் கனவாய்
போனதென்ன-

இரத்தம்
கைகளில் மட்டுமல்ல
கால்களில் மட்டுமல்ல
எங்கள் இதயங்களிலும்தான்-

இனவாதம்
எங்கும் இருந்து
விட்டு போகட்டும்-

அது
இருக்கக்கூடாது
மாணவனின்
மனதில்
மட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களூர் சிறை

இரவு
இருண்ட
சிறை-

'மல்லி
படகினித .....'

விடிந்தது
விடுதலை

நண்பன்
வீட்டு
சாளரங்கள்
கூட
சாத்திக் கொண்டன-

இதயம்
அது
எங்கிருந்தாலும்
துடிக்கும்
ஆனால்
அது ...?

- சிந்தாமணி.

---

**தன் இரைப்பையை நிரப்பிட
கருப்பையை ஆண்மையுடன்
அடகுவைக்கும் அபலை-
விலைமகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களூர் மாவட்டப் பிரதிநிதி

மக்கள் பிரதிநிதி சிவகுமார்
மணிமணியாய் பேசுவதில் சூரர்-
தக்ஸலா பாரிலே
தலைசோர்ந்து கிடக்கின்றார்-
மக்களுடன் மனைவி கண் ணீரில்.

எங்கள் கண்ணீர் காய்ந்து
கவின் தரு பசையானது.
இறப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களூர் ஆசிரியர்

ஐய்யய்யோ!
என் மகன்
ஆசிரியனாய்
போனானே–
ஒரு

அரசியல்வாதியின்
வாலின் மகனை
வாசிப்பு பிழைக்குதுன்னு
அடித்தால்
நடுரோட்டிலே
பிடித்து வைத்து
உன்னை
நாய்போல்
அடிப்பார்களே-

ஒரு வயசுபிள்ளைக்கு
ஒரு கணக்கு
சொல்லி
கொடுக்கையிலே-
லவ்லெட்டர் நீ
கொடுத்ததனு உனை
பொலிஸில் சொல்லி
பொல்லால் அடிப்பார்களே.

ஒரு அதிகாரியிடம்
சத்தமா பேசினாய் என
உச்சிமலை
தூரத்துக்கு - ட்ரான்ஸ்பராய்
துரத்தி அடிப்பார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிப்புளோமா
டிகிரி என
மேலே படிக்க
கொழும்பு
போகையிலே—

கொம்பனிதெரு
சந்தியிலே
உன்னை பிடித்து
பொலிஸில்
கும்மாங்குத்து
குத்துவார்களே.

பட்டம்
பதவி தேவையில்லை
பருப்பு சாம்பார்
போதும்
பத்திரமாய்
வந்துவிடு.

அஞ்சாங்கிளாஸ்
ஸ்கொலர்சீப்
ஓ . எல்...
ஏ...எல் ..
வகுப்பு என
ஆறுமணி வரைக்கும்
கத்தி...கத்தி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்த்துமா
நோயிலே
நீ
ஆடிப்போய்
நடக்கையிலே-
உனை பாத்து
ஊசத்தும்
அடிப்பாங்களே!

புத்தர் வந்தும்
திருந்தவில்லை-
அவன் வைத்த
போதிமரம்
செழிக்கவில்லை-

யேசு வந்தும்
திருந்தவில்லை-
இவர் பாவம்
சிலுவையிலே
ஏறவில்லை-

மகா
மாரி வந்தும்
திருந்தவில்லை-
பின்னாளில்
மாதா
மேரி வந்தும்
திருந்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபியின் போதனையெல்லாம்
இவர்
நாக்கிலேயே
நின்றிருச்சே.

மார்க்ஸ் வந்தும்
திருந்தலேயே-
இங்க
மனமாற்றம்
நடக்கயில்லையே.

பிறருக்கு
புத்தி சொல்லி
புத்தி சொல்லி
உனக்கு
புத்திகெட்டுப்
போச்சுதடா.

UNIVERSITY OF PERADENIYA
16-8-2000
LIBRARY



510482
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
16-8-2000
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ. செல்வராஜ்......

தலவாக்கொல்லை பெயாவெல் தோட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் (1979) வீரகேசரியில் வெளியான " முனைவு" எனும் புதுக்கவிதை மூலம் கவிதைத் துறையில் பிரவேசித்தார்.

இது வரை நூற்றுக்கு அதிகமான கவிதைகள் எழுதியுள்ளார். கவிதைப் போட்டியில் மாவட்ட, தேசிய ரீதியில் பல பரிசுகள் பெற்றுள்ளார்.

மலையக தமிழ் இலக்கியம் எனும் நூலில் பேராசிரியர் எம். அருனாசலம் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். கலாநிதி கைலாசபதி இவரது 'தோட்டத்து ஸ்கூல்' என்ற கவிதையை தனது நூலொன்றில் விமர்சித்துள்ளார்.

1982 இல் பேராதனை பல்கலைக்கழக விவாதப் போட்டியில் இவர் தலைமையேற்ற குழு முதல் பரிசினையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

**தமிழ் மணி குறிஞ்சி தென்னவன்.**

510482

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org